**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம்/சார்பு நீதிமன்றம்**
**பத்மனாபபுரம்**
**முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி**

**2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 5-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை மனு எண். 33/2018**
**CNR-TNKK07-000246-2018**

ரவி

... மனுதாரர்

/எதிர்/

1.ரதீஷ்குமார்

2. தமிழ்நாடு மாநிலர் போக்குவரத்துக்

கழகத்தின் திருநெல்வேலி கோட்டம்

அதன் நிர்வாக இயக்குநர் சார்பாக

... எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது 24.04.2026 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எம். முருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. வெற்றிச்செல்வன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் எனது கவனமான பரிசீலனையின் கீழ் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**உத்தரவு**

மனுதாரர் இம்மனுவை மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166(i) ன் கீழ் மனுதாரர் 19.09.2017 அன்று 2.35 மணியளவில் இணையம் புத்தன்துறை என்ற இடத்தில் வைத்து நடந்த வாகன விபத்தில் காயமடைந்ததற்கு இழப்பீடாக

ரூ.3,50,000/– வழங்குமாறும், மேற்படி தொகைக்கு மனு தாக்கல் செய்த நாளில் இருந்து தொகை வசூலாகும் தேதி வரை 12% வருட வட்டி மற்றும் செலவு தொகை கோரியும் தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுவின் சுருக்கம்**

19.09.2017ம் தேதி மனுதாரர் அவரது மனைவியுடன் நாகர்கோவிலுள்ள தையல் தொழிலாளர் நலவாரியத்திற்கு சென்று அங்கு வேலைகளை முடித்துவிட்டு மனுதாரருக்கு சொந்தமான TN 74 5734 எண் கொண்ட ஹீரோஹாண்டா இரு சக்கர வாகனத்தில் வீட்டிற்கு திரும்ப வந்து கொண்டிருந்த போது 2.35 மணிக்கு நாகர்கோவில் காதிம்ஸ் கடை பக்கம் பின் இருக்கையில் மனைவியை இருத்தி ஓட்டி வரும் போது இணையம் புத்தன்துறைக்கு செல்லும் TN 74 N 1611 எண் கொண்ட அரசு பேருந்தை அதன் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் கிழக்கிலிருந்து மேற்காக அதிவேகத்துடனும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மனுதாரர் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். இதனால் மனுதாரருக்கு வலது தோள் பட்டையிலும் வலது கை, கால் ஆகிய இடங்களில் கொடுங்காயம் ஏற்பட்டு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிட்சைக்காக சேர்த்து பின்னர் திலகராம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மனுதாரர் பெடரல் வங்கியின் ATM பாதுகாவலராக பணிபுரிந்து வந்தார். விபத்து பற்றி நாகர்கோவில் போக்குவரத்து காவல் பிரிவு போலீசார் குற்ற எண். 80/2017 இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(ஏ) ன் படி 1வது எதிர்மனுதாரர் மீது வழக்கு தொடர்ந்துள்ளனர். எனவே பல்வேறு தலைப்புகளின் கீழ் ரூ.3,50,000/– இழப்பீடு கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. 2 **வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் குறிப்பாக

ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர இதர சங்கதிகள் மறுக்கப்படுகிறது. மனுதாரர் மனுவில் கூறியுள்ளபடி விபத்து ஏற்படவில்லை. விபத்து ஏற்பட்ட விதத்தை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டும். இறந்து போனவருக்கு எவ்வித வேலையோ, வருமானமோ கிடையாது. விபத்து தொடர்பான முழு விவரங்களை மனுதாரர் குறிப்பிடவில்லை. மனுதாரரே இரு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் இயக்கி விபத்தை ஏற்படுத்தி உள்ளார். 1வது மனுதாரருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை. TN 74 5734 வாகனம் விபத்தில் ஈடுபடவில்லை. போலிசாரை சுவாதீனப்படுத்தி 1வது எதிர்ம்னுதாரர் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1வது மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ள படியால் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை. அதிக இழப்பீட்டு தொகையும் அதிக வட்டியும் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

1வது எதிர்மனுதாரர் 2வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை அப்படியே ஏற்றுக்கொண்டார்.

4. 1, 2 <u>வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிருரையின் சுருக்கம்:</u>–

புகார் மனுவில் TN 74 5734 என வாகன எண் குறிப்பிடப்பட்டுள்ளது. வாகனத்தின் சரியான எண்ணை குறிப்பிட மனுதாரர் தவறிவிட்டார். மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டுமென்றால் வாகன உரிமையாளரும் ஓட்டுநரும் தான் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். TN 74 5734 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் உரிமையாளரையும் காப்பீட்டு நிறுவனத்தையும் மனுவில் சேர்க்கவில்லை. அவசியான தரப்பினரை கட்சி சேர்க்காததால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

5. மனுதாரர் தரப்பில், ம.சா.1 விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1 விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் இல்லை.

6. **இம்மனுவில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*1) மனு விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது ?*

*2) மனுதாரருக்கு யார் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் ?*

*3) மனுதாரர் கோரியுள்ளபடி இழப்பீட்டு தொகை பெற உரிமை உடையவரா ?*

7 . **பிரச்சனை எண் 1:–**

மனுதாரர் தனது மனுவில், 19.9.2017ம் தேதி 1வது மனுதாரர் தனது மனைவியுடன் நாகர்கோவிலிலுள்ள தையல் தொழிலாளர் நலவாரியத்திற்கு சென்றுவிட்டு வேலைகளை முடித்து TN 74 5734 என்ற இருசக்கர வாகனத்தில் திரும்ப வந்து கொண்டிருந்த போது காதிம்ஸ் கடை அருகே வந்து கொண்டிருந்த போது TN 74 N 1611 அரசுப்பேருநதை 1வது எதிர்மனுதாரர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இரு சக்கர வாகனத்தில் பின்னால் மோதி ஏற்பட்ட விபத்தில் மனுதாரரின் மனைவி சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது. விபத்து தொடர்பாக 1வது எதிர்மனுதாரர் மீது குற்ற எண். 89/2017 பிரிவுகள் 279, 337, 304(ஏ) இ.த.ச படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் ம.சா.1 சாட்சியத்திலிருந்தும் ம.சா.ஆ–1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் மூலமும் 1வது எதிர்மனுதாரரின் கவன்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. 1வது எதிர்மனுதாரர் அரசுப்பேருந்தை கவனமாக ஓட்டி வந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம். எனவே மனு விபத்திற்கு 1– வது எதிர்மனுதாரரின்

கவனக்குறைவே முழு காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து பிரச்சனை எண் 1–ற்கு இத்தீர்ப்பாயம் விடை காண்கிறது.

இவ்வழக்கில் விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்தின் பதிவு எண். TN 74 5734 என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் மனுவில் தவறான பதிவு எண்ணை குறிப்பிட்டிருந்தாலும் வழக்கு ஆவணங்களிலிருந்து TN 74 5735 ஆகும். எனவே வழக்கு விபத்தில் சம்மந்தப்பட்ட வாகன விவரங்கள் உண்மையானது என்பதால் தவறான பதிவு எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது மட்டுமே மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை வழங்குவதை தடை செய்யாது என தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

8. <u>பிரச்சினை 2 :</u>

இவ்வழக்கு வாகன விபத்தானது 1வது எதிர்மனுதாரர் TN 74 N 1611 என்ற அரசுப் பேருந்தை அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. 1வது எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் 2வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, காப்பீடு விபத்து சமயத்தில் ஊர்ஜிதத்தில் உள்ளது தெரிய வருகிறது. எனவே 2வது எதிர்மனுதாரர் தான் மனுதாரருக்கு இழப்பீடு தொகை வழங்க கடமைப்பட்டவர் என்று பிரச்சினை எண்.3 –ற்கு இத்தீர்ப்பாயம் விடை காண்கிறது.

9. <u>பிரச்சினை எண். 3 :–</u>

(i) <u>மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்திற்காக:</u>

விபத்தின் போது மனுதாரரின் வயது 72. விபத்தின் காரணமாக மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் தன்மையை குறித்து, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் மருத்துவர் குழு பரிசோதனை செய்து

வழங்கிய ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1ன் படி 10% ஊனம் என சான்று வழங்கியுள்ளது. நீ.ம.சா.ஆ–1 ஆவணத்தின் படி மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம் 10% என்றும், ம.சா.ஆ.5 காயச்சான்றிலிருந்து மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக தெரிய வருகிறது. விபத்தில் ஏற்பட்ட ஊனத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.3,000/– வீதம் இழப்பீடு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே மனுதாரருக்கு பகுதி நிரந்தர ஊனத்திற்காக நீ.ம.சா.ஆ.ன் படி 10 X 4,000 = ரூ.40,000/– மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

(ii) **வலி மற்றும் வேதனைக்காக**:

விபத்தின் காரணமாக மனுதாரர் திலகராம் எலும்பு முறிவு மருத்துவமனையில் 19.09.2017ம் தேதி அனுமதிக்கப்பட்டு, அங்கு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. சிகிச்சை முடிந்து 20.09.2017 அன்று விடுவிக்கப்பட்டார். மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் கொடுங்காயம் என்று ம.சா.ஆ–5 ஆவணங்களில் இருந்து தெரியவருகிறது. எனவே மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயம், மனுதாரர் உள்நோயாளியாக சிகிட்சை பெற்ற கால அளவுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.50,000/– மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

(iv) **மருத்துவ செலவினம்**:

விபத்தின் காரணமாக மனுதாரர் திலகராம் எலும்பு முறிவு மருத்துவமனையில் 19.09.2017ம் தேதி அனுமதிக்கப்பட்டு, அங்கு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. சிகிச்சை முடிந்து 20.09.2017 அன்று விடுவிக்கப்பட்டார். மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவுகள் குறித்து ம.சா.ஆ. 6 ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை பரிசீலனை செய்யும் போது

மனுதாரர் திரவியம் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைக்காக தொகை செலுத்தியுள்ளார் என்பது தெளிவாகத் தெரியவருகிறது. எனவே ம.சா.ஆ.6 ஆவணங்களில் இருந்து ரூ.31,498/– மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**(v) <u>ஊட்டச்சத்து உணவிற்காக</u>:**

மனுதாரருக்கு விபத்தினால் காயம் ஏற்பட்டு ஷாலோம் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டுள்ளார். அவருக்கு அவருக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாவதற்கு நல்ல ஊட்டச்சத்து வழங்கக்கூடிய உணவுகள் தேவைப்படும் என்பதால் ஊட்டச்சத்தான உணவுகள் எடுத்து கொண்ட வகையில் ரூ.10,000/– வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

(vi) **<u>உடன் இருந்தவருக்கான செலவு</u>**:

மனுதாரர் விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக நடக்க முடியாமல் இருந்ததால் அவருக்கு நிச்சயம் ஒருவரின் உதவி தேவைப்பட்டிருக்கும். எனவே உடன் இருந்தவருக்கான செலவு ரூ.20,000/– வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

Vii) **<u>போக்குவரத்து செலவினம்</u>**:

மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்று வந்ததற்கான போக்குவரத்து செலவிற்காக ரூ.10,000/– கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

(Viii) **<u>ஆடை அணிகலன்களுக்கு இழப்பீடு</u>**:

மனுதாரர் விபத்தின் போது அணிந்திருந்த ஆடைகள் கிழிந்தும், இரத்தம் பட்டும் மீண்டும் உபயோகிக்க முடியாமல் போய் இருக்கும். மேலும் மனுதாரர் விபத்து சமயம் அணிந்திருந்த அணிகலன்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம். எனவே ஆடை அணிகலன்களுக்கு இழப்பீடாக ரூ.2,000/– வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

10. மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் மனுதாரருக்கு கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் இழப்பீட்டு தொகை வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஊனத்திற்கான செலவினம் | ரூ.40,000/– |
| 2. | வலி மற்றும் வேதனைகளுக்கு இழப்பீடு | ரூ.50,000/– |
| 3. | மருத்துவ செலவினம் | ரூ.31498 /– |
| 4. | ஊட்டச்சத்து செலவினம் | ரூ.10,000/– |
| 5. | உடன் இருந்தவருக்கான செலவு | ரூ. 20,000/– |
| 6. | போக்குவரத்து செலவு | ரூ.10,000/– |
| 7. | ஆடை அணிகலன்களுக்கு இழப்பீடு | ரூ.2,000/– |
| | **மொத்தம்** | **ரூ.1,63,498/–** |

11. எனவே மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ. **1,63,498/–** மனு தாக்கல் செய்த நாள் முதல் தொகை வைப்பீடு செய்யும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடனும் மற்றும் செலவு தொகையுடனும் கிடைக்கத்தக்கது என்று பிரச்சனை 3–க்கு இத்தீர்ப்பாயம் விடை காண்கிறது.

**இறுதியாக,**

1. இம்மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு 2–வது எதிர்மனுதாரர் ரூ. **1,63,498/–**ஐ இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டு தொகைக்கு இம்மனு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை வைப்பீடு செய்யும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டி

மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் (சார்பு நீதிமன்றம், பத்மனாபபுரம்) இந்தியன் வங்கி, நடப்பு கணக்கு எண் 6541018634–ல் நேரடியாக NEFT/RTGS மூலம் 2–வது எதிர்மனுதாரர் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

2. 2–வது எதிர்மனுதாரர் மேற்படி இழப்பீட்டு தொகையை மேற்கண்டவாறு வங்கியில் செலுத்திய பின்னர் வங்கி அறிவுறுத்தல் நகலை (Copy of Bank Advice) கடிதம் மூலம் இத்தீர்ப்பாயத்திற்கும், அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப உத்தரவிடப் படுகிறது.

3. மனுதாரர் இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத் தொகையில் பாதி தொகையை உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என்றும், மீதமுள்ள பாதி தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் 3 ஆண்டுகள் வைப்பீடு செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

4. மனுதாரர் இழப்பீட்டு தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணத்தை இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் நீதிமன்றக்கட்டணம் செலுத்தும் வரை மனுதாரர் வட்டி பெற உரிமையில்லை என்றும் உத்தரவிடப்படுகிறது.

5. வழக்கறிஞர் கட்டணம் ரூ.6270/– நிர்ணயம் செய்யப்படுகிறது.

**<u>வங்கி கணக்கு விபரம்</u>**

| | | |
|---|---|---|
| வங்கியின் பெயர் | : | இந்தியன் வங்கி, தக்கலை |
| நடப்பு கணக்கு எண் | : | 6541018634 |
| IFSC Code | : | IDIB000T140 |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 05 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.06.08 16:24:39 +0530

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்/
சார்பு நீதிபதி, பத்மநாபபுரம்

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

ம.சா.1 – திரு. ரவி

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

எ.ம.சா.1 – திரு. ரதீஷ்குமார்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை |
| ம.சா.ஆ.2 | பார்வை மகஜர் |
| ம.சா.ஆ.3 | 19.09.2017 தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| ம.சா.ஆ.4 | 20.09.2017 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| ம.சா.ஆ.5 | காயச்சான்றிதழ் |
| ம.சா.ஆ.6 | மருத்துவ பில்கள் |
| ம.சா.ஆ.7 | TN 74 5735 என்ற வாகனத்தின் பதிவு சான்றிதழின் இணையவழி நகல் |

ம.சா.ஆ–8 ம.சா.1ன் ஓட்டுநர் உரிமம் புகைப்பட நகல்

**<u>நீதிமன்ற சான்றாவணம்</u>**

நீ.ம.சா.ஆ–1 – ஊனச்சான்றிதழ்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

இல்லை

K MARIAPPAN

Digitally signed by K MARIAPPAN
Date: 2026.06.08 16:24:47 +0530

சா.நீ.

பத்மநாபபுரம்

÷